Sri V. S. S. MANI : Sir, this is an allied question.

Mr. SPEAKER : But the main question relates to a particular complaint.

திரு. சா. கணேசன் : இந்தச் சங்கத்தின் மீது சில குற்றச் சாட்டுகள் வந்தன என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் அவை சிறியதும், அறபமானதும் ஆகும் என்று குறிப்பிட்டுள்ளார்கள். மிகப் பெரும் பணம் இதனால் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்பது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்ததா? அப்படியானால் அதன் மீது என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது? அப்படி வந்த நஷ்டமும் சட்டப்படி, விதிமுறைப்படி வந்ததுதானா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நஷ்டம் வந்ததாக சர்க்காரிடத்தில் புகார் எதுவும் வரவில்லை.

திரு. எம். எஸ். மணி : அந்தச் சங்க உறுப்பினர்களிடம் இருந்து ஊழல் குற்றச்சாட்டுகள் வந்திருக்கின்றன என்று குறிப்பிட்டார்கள். அந்தக் குற்றச்சாட்டுகள் என்ன என்ன என்று கனம் அமைச்சர் அவர்கள் சொல்ல முடியுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்தக் குற்றச்சாட்டுகள் என்ன என்ன என்கிற தகவல் என்னிடத்தில் இல்லை. கனம் அங்கத்தினரிடத்தில் இருந்தால் அதை எனக்கு எழுதி அனுப்பலாம். சர்க்கார் நிச்சயமாகப் பரிசீலனை செய்யும்.

திரு. எஸ். முருகையன் : இந்தக் கூட்டுறவு சங்கத்தில்தான் அமைச்சர் பெயரிலேயே தப்பான கணக்கை எழுதிக் காட்டியிருக்கிறார்கள். இது சம்பந்தமாக விசாரணைகள் செய்யப்பட்டனவா? அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அது ஒரு சிறிய தவறுதான். அமைச்சர் பெயரில் விற்கப்பட்டதாக எழுதியிருக்கிறது. அதுவும் கடனைக் கொடுத்ததாகத் தெரிகிறது. இதில் மந்திரிகளால் தப்பு ஏற்படவில்லை. மந்திரிகள் கூட்டுறவுச் சங்கங்களிலேயே வாங்கக் கூடாது என்று இல்லை. ஆக இதில் தவறு இல்லை என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

* 394 **கேள்வி.—திரு. செ. மாதவன் :**
திரு. வை. சங்கரன் : } கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகும் 'வண்ணம் மாறும்' துணிகள், கைக்குட்டைகள் ஆகியவைகளை அதிகமாக ஏற்றுமதி செய்ய முயற்சிகள் ஏதேனும் அண்மையில் பரிசீலிக்கப்பட்டனவா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

4th November 1966]

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) ஆம்.

(இ) வண்ணம் மாறும் கைத்தறித் துணிகளுக்கு (Bleeding Madras) அமெரிக்கச் சந்தையில் இருந்த தேவையை மீண்டும் புதுப்பிக்கவும், மேற்கு ஐரோப்பாவில் புதுப்புது மார்க்கெட்டுகளில் இத்தகைய துணிகளின் விற்பனைக்கு வழிவகை காணவும், ஐந்து பேர் அடங்கிய தூதுக்குழு ஒன்றை இந்திய அரசு அனுப்பியது. வண்ணம் மாறும் கைத்தறித் துணிகள் குறித்து புதியதொரு ஏற்றுமதிக் கொள்கையை இந்திய அரசு இக்குழுவின் பரிவுரைகளையொட்டி அறிவித்துள்ளது.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இப்போது நம்முடைய துணிகளுக்கு வெளிநாடுகளில் போட்டி அதிகம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, வியாபாரம் பாதிக்கப்படாதிருக்க விலையைக் குறைத்துக்கொடுக்க பரிசீலிக்கப்பட்டதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நம் நாட்டுத் துணி கைத்தறிகளில் நெய்யப்படுபவை. ஜப்பான், ஹாங்காங்கில் இருந்து வரக்கூடிய வண்ணம் மாறும் துணிகளைப் போல தோற்றக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டு வருபவை மில்லில் நெய்யக்கூடியவை. ஆகவே, கைத்தறித் துணிகளைவிட கணிசமான அளவில் விலை குறைவாக இருக்கும். அந்தத் துணிகளோடு நம் நாட்டுத் துணிகள் மார்க்கெட்டில் போட்டிப்போட்டுச் சமாளிக்க முடியாது. மில் துணி விலையை விட நம் நாட்டுக் கைத்தறித் துணிகள் விலை அதிகமாகத்தான் இருக்கும். இவை கைத்தறிகளில் நெய்யப்படுபவை, விசேஷமாக தயாரிக்கப்பட்டவை, நல்ல ரகம் என்பதை எல்லாம் எடுத்துக் காட்டுவதன் மூலமாகத்தான் மார்க்கெட்டில் ஊன்றிக்கொள்ள வேண்டும். விலைவாசி ஏற்றத் தாழ்வை எடுத்துக் காட்டி—இதுவரையிலும் நாம் ப்ளோர் ப்ரைஸ் என்பதாக குறைந்த பட்ச விலையை நிர்ணயித்து, சீலிங் ப்ரைஸ் என்பதாக உயர்ந்த பட்ச விலையையும் நிர்ணயித்துக்கொண்டிருந்தோம். அதை எடுத்துவிடவேண்டும் என்பதாக சர்க்கார் சிபார்சு செய்து, அதை மத்திய சர்க்காரும் எடுத்துவிட்டது.

திரு. வை. சங்கரன் : ஜப்பான் நாட்டில் இருந்து மட்டும்தான் போட்டி ரகத் துணிகள் வந்திருக்கின்றனவா ? அல்லது வேறு நாடுகளில் இருந்தும் வந்திருக்கின்றனவா ? அந்தத் துணிகள் விலை மிகவும் குறைந்திருக்கின்றனவா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அமெரிக்காவில் இருந்தும் இமிடேஷன் மெட்ராஸ் ப்ளீடிங்—தோற்றம் மெட்ராஸ் ப்ளீடிங் ரகத் துணிபோல இருக்குமே தவிர, வண்ணம் மாறாது—என்பது தயாரிக்கப்படுகிறது.

திரு. எ. எஸ். தட்சிணாமூர்த்தி கவுண்டர் : ரூபாய் மதிப்புக் குறைந்திருப்பதினால் அயல்நாடுகளில் நம் நாட்டுத் துணிகளுக்கு கிராக்கி ஏற்பட்டிருக்குமா என்று அறிய விரும்புகின்றேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஏற்படும் என்று எதிர்பார்த்தோம். இதுவரையில் ஏற்படவில்லை.

[4th November 1966

திரு. கரு. சீமைச்சாமி : நம்முடைய நாட்டில் இருந்து கைத் தறியில் தயாரிக்கப்படுகிற கைலிகள், ஹாண்டு கர்சீப்கள் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி ஆகிறது இல்லையா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நீண்ட காலமாக ஆப்பிரிக்க நாட்டு மக்கள் நம் நாட்டு ஹெட் டைஸ், ஹாண்டு கர்சீப் ஆகியவை களை விரும்பி வாங்கி உபயோகித்துக்கொண்டு வந்தார்கள். ஆனால் அந்நாட்டு ஏற்றுமதியும் குறைந்துவிட்டது. அதற்குக் காரணம் அவர்கள் உள்நாட்டிலேயே உற்பத்தி செய்து கொள்கிறார்கள்.

புலவர் கா. கோவிந்தன் : தமிழ்நாட்டில் இருந்து சேலைகளை வாங்கிவரக்கூடாது என்று சிலோன் சர்க்கார் தடை உத்தரவு போட்டிருக்கிறார்களே, அதனால் நம் நாட்டுக் கைத்தறித் துணிகள் பாதிக்கப்படவில்லையா ? அதைத் தவிர்க்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதுபற்றி அதிகார பூர்வ மான விவரம் என்னிடத்தில் இல்லை.

திரு. சா. கணேசன் : இந்திய நாணயச் செலாவணி மதிப்பைக் குறைப்பதனால் நமது ஏற்றுமதி வர்த்தகம் வளரும் என்று எதிர் பார்த்தோம். ஆனால், ஏற்படவில்லை என்பதாக கனம் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படியானால் விலையை பிற நாடு களும் நம்முடைய நாட்டுத் துணிகளுக்கு ஏற்ப குறைத்துக் கொண்டுவிட்டார்களா? மற்ற நாட்டுத் துணிகளைவிட நம் விலை குறைந்து இருந்தும் துணிகள் எடுபடாமல் இருக்கக் காரணம் என்ன ? நம்முடைய நாட்டுத் துணிகளின் தரம் குறைந்து விட்டதா ? நம் நாட்டுத் துணிகளின் ஏற்றுமதி வர்த்தகம் வளராமல் பாதிக்கப்பட்டிருப்பதற்கான காரணங்கள் இருந்தால் அவற்றைத் தெரிவிக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் அங்கத்தினர் சொன்ன காரணங்கள் ஒன்றும் இல்லை. வெளிநாடுகளில் பாஷன் மாறிவிடுகிறது. சென்ற ஆண்டு வரையிலும் ப்ளீடிங் மெட்ராஸ் ரகத் துணிகளை அதிகமாக மக்கள் வாங்கி உபயோகித்தார்கள். இப்போது பெய்ஸ் லீஸ் ரகத் துணிகளுக்கு மாறிவிட்டார்கள். எப்போதும் அமெரிக்கன் மார்க்கெட் மாறிக்கொண்டேயிருக்கும். ஃபிக்கிளாக இருக்கும். அதனால்தான் நம் ரகத் துணிகளுக்கு கிராக்கி இல்லை.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, நாணய மதிப்புக் குறைப்பினால் அதிகமாக ஏற்றுமதியாகும் என்பது தவறாகும் என்பதாக முன்பே கனம் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார் கள். ஆகவே இதை மாற்ற நம் அரசாங்கம் ஏதேனும் யோசனை தெரிவித்திருக்கிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அது உரிய காலத்தில் சொல்லப்படும்.

4th November 1966]

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் தலைவர் அவர்களே, வெளி நாட்டில் பாஷன் மாறிவிடுகிற காரணத்தினால் நம் நாட்டுத் துணி களுக்கு கிராக்கி இல்லை என்பதாக கனம் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆகவே நம் நாட்டு நெசவாளர்கள் இந்த ரகத் துணிகளையே உற்பத்தி செய்துகொண்டிருக்காது, பாஷன்களுக்கு ஏற்ப உற்பத்தி செய்யவேண்டும் என்பது எடுத்துச் சொல்லப் பட்டிருக்கிறதா ? அல்லது பழைய முறையிலேயே அதிக அளவில் உற்பத்தி செய்துகொண்டிருக்கிறார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நம் நாட்டுக் கைத்தறி யாளர்களும் அந்த ரகத் துணி உற்பத்தியை நிறுத்திக்கொண்டு விட்டார்கள். நம்மிடத்தில் உள்ள பழைய ஸ்டாக்கைத்தான் எப்படிக் கரைப்பது என்பது பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

திரு. க. ர. நல்லசிவம் : வண்ணம் மாறும் துணிகள் மட்டும் அல்ல. வேறு ரக கைத்தறித் துணிகளும் இன்றையதினம் தேங்கிக் கிடப்பதன் காரணமாக, கைத்தறியாளர்கள் பட்டினி கிடக்க வேண்டிய நிலை இருக்கிறது. அவர்களுக்கு உதவி செய்ய எந்த வகையில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதற்காக சர்க்கார் 50 லட்சம் ரூபாய் கடன் கொடுத்து தேங்கிக் கிடக்கிற துணியை வாங்க ஏற்பாடு செய்திருக்கிறது.

Textile Mills at Coimbatore

* 395 *Q*.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the steps taken and the efforts made for reopening the textile mills that remain closed for some months past at Coimbatore; and

(*b*) the result of the said endeavour?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) The State Government constituted an informal *ad hoc* Technical Committee consisting of the Director of Handlooms, Madras, and representatives of the South India Textile Research Association and Southern India Mill Owners' Association to make a close scrutiny of technical and financial position of the mills wanting nancial assistance.

The Committee has since completed its enquiries and the Government have issued orders, based on its recommendations.

திரு. வை. சங்கரன் : இதனுடைய விளைவாக மூடப்பட்டுள்ள மில்கள் எத்தனை திறக்கப்படும் என்று எதிர்பார்க்கலாம் என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : மூன்று மில்களுக்கு உதவி செய்து திறக்கப்படும். ஒன்று கம்போடியா மில். இரண்டாவது ஜனார்த்தனா மில். மூன்றாவது கீதாஞ்சலி மில். பாங்குகளில் கடன் வாங்க ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறார்கள்.